**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**

**திருவில்லிபுத்தூர்**

**முன்னிலை : திரு. பி.சி. கோபிநாத், எம்.எல்.,**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**

**திருவில்லிபுத்தூர்.**

**2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A. No.3/2022**
**in**
**O.S. No. 22/2015**
**---------**

செல்வக்குமார் .. மனுதாரர் / 6ம் பிரதிவாதி

.. எதிர் ..

இராஜபாளையம், சின்னச்சுரைக்காய்பட்டி
அருள்மிகு பத்திரகாளியம்மன் திருக்கோவில்
அதன் தற்போதைய அறங்காவலர்
குழுத்தலைவர் மூலமாக

.. எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்னர் கடந்த 14.10.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.G.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. பரமசிவம் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிர்உரை மற்றும் இதர ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இன்று இம்மனுவைப் பொறுத்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் நீதிமன்றம் மனுதாரருக்கு எதிராக கடந்த 19.07.2016ம் தேதி பிறப்பித்துள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்துசெய்து

உத்தரவிடக் கோரி இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9, விதிகள் 7 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*2)* **<u>மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் அசல் வழக்கில் 6ம் பிரதிவாதி. இதில் எதிர்மனுதாரர் / வாதி 2வது தபசில் சொத்தினை பொறுத்து விளம்புகைப்பரிகாரம் மற்றும் செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாவா அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 19.07.2016 வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் தனக்கு 01.05.2016முதல் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு வீட்டிலிருந்தபடியே நாட்டு வைத்திய சிகிச்சை பெற்று வந்ததாகவும், பின்னர் கொரனா ஊரடங்கு காரணமாக தன்னால் வீட்டை விட்டு வெளியே செல்ல இயலவில்லை என்றும், பின்னர் தன் வழக்கறிஞரை சந்தித்து விவரம் கேட்டபோது, தாவா அசல் வழக்கில் கடந்த 19.07.2016 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், இந்த தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தாவா மனுவினை அனுமதிப்பதற்கு போதுமான சாத்தியகூறுகள் தனது பக்கமே உள்ளதாகவும் கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*3)* **<u>எதிர் உரையின் சுருக்கம்:-</u>**

மனுதாரரின் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றும், மனுதாரர் இந்த மனுவை 6 வருடங்கள் கழித்து தாக்கல்

செய்துள்ளார் என்றும், இந்த வழக்கானது விசாரணைப்பட்டியலில் போடப்பட்டுள்ளதை தெரிந்துகொண்டு ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டதாக பொய்யான காரணங்களைக் கூறி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கப்பட்டால் தங்களுக்கு அநேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*4)* தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் தரப்பில் கோரியுள்ளபடி மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

*5)* வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர் / வாதி 2வது தபசில் சொத்தினை பொறுத்து விளம்புகைப்பரிகாரம் மற்றும் செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அதில் பதிலுரை தாக்கல் செய்வதற்காக 19.07.2016 அன்று வாய்தா ஏற்பட்டபோதும் இந்த மனுதாரர் /6ம் பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்யாததால், இந்நீதிமன்றம் அவரை தோன்றாதரப்பினராக்கி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளது. அதனை ரத்துசெய்யக்கோரி 6ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

*6)* இம்மனுவுடன் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண

வாக்குமூலத்தில் தனக்கு *01.05.2016* முதல் மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு வீட்டில் இருந்தபடியே நாட்டு வைத்திய சிகிச்சை பெற்றுவந்ததாகவும், பின்னர் மீண்டும் மஞ்சள்காமாலை நோய் இருந்ததாகவும், அதன்பின்னர் கொரோனா ஊரடங்கு காரணத்தால் வீட்டை விட்டு வெளியே செல்ல இயலவில்லை என்பதால் சற்று குணம் அடைந்த பின்பு வழக்கறிஞரை சந்தித்து *19.07.2016* அன்று தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை பற்றி தெரிந்துகொண்டதாக தெரிவித்துள்ளார். இதனை எதிர்மனுதாரர் உண்மைக்கு புறம்பானவை என்றும், பொய் என்றும் மறுத்துள்ளார்.

*7)* மனுதாரர்க்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டது என்பதும், அதற்கு நாட்டு மருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டதும், பல ஆண்டுகளாக ஆவணமின்றி கூறப்படும் ஒரு காரணமாகவே இருந்துகொண்டு இருக்கிறது. மனுதாரர் *01.05.2016* முதல் மஞ்சள் காமாலையால் அவதிப்படுவதாக கூறுகிறார். பின்னர் மீண்டும் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டதாகவும் கூறுகிறார். அதன்பின்னர் கொரோனா ஊரடங்கு இருந்ததாலும், ஒரு தலைபட்ச உத்தரவை ரத்துசெய்ய முன்வரவில்லை என்றும் கூறுகிறார். இதே காரணத்தை சொல்லி *8*ம் பிரதிவாதியும் ஒரு மனுவினை தாக்கல் செய்துள்ளார். கொரோனா ஊரடங்கு என்பது கடந்த *2020*ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தான் இருந்தது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எனவே கொரோனா ஊரடங்கு ஏற்படுவதற்கு முன்பு ஏறத்தாழ *4* ஆண்டுகளாக தனக்கு எதிரான ஒருதலைபட்ச

உத்தரவை ரத்து செய்ய மனுதாரர் முன்வரவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் அவர் 4 ஆண்டுகள் தொடர்ந்து மஞ்சள் காமாலை நோயால் அவதிப்பட்டு அதற்கு நாட்டு மருந்து சிகிச்சை எடுத்து கொண்டார் என்பதும் நம்பத்தக்க வகையில் இல்லை.

*8)* இவ்வழக்கில் 09.09.2020 அன்றே எழுவினாக்கள் வனையப்பட்டு 04.03.2020 அன்று வழக்கு சிறப்பு பட்டியலில் போடப்பட்டுள்ளது. ஆனால் 19.03.2020 அன்று பதில் வழக்குரை சேர்ப்பதற்காக இடைநிலை மனு எண். 01/2020 தாக்கல் செய்யப்பட்டு பின்பு கொரோனா ஊரடங்கில் இந்நீதிமன்றம் செயலற்று கிடந்தது என்பது தெரிய வருகிறது. மேலும் இவ்வழக்கானது தற்போது மீண்டும் 13.04.2022 அன்று சிறப்பு பட்டியலில் விசாரணைக்காக போடப்பட்ட நிலையில், மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவர் இம்மனுவில் கூறிய காரணங்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளாத வகையில் இருந்தாலும் எதிர்மனுதாரரின் ஆட்சேபணை நியாயமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதினாலும் வழக்கு விசாரணை இன்றும் தொடங்காத நிலையில் பிரதிவாதிக்கு வழக்கு விசாரணையில் பங்கேற்று தனது வழக்கை முனைப்படுத்த ஒரு வாய்ப்பு கொடுப்பது நீதியின் நலுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆயினும் காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவிற்கு உரிய செலவுத்தொகை மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்/6ம் பிரதிவாதி எதிர்மனுதாரருக்கு ரூ.1000/-மும், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டப் பணிகள்

ஆணைக்குழுவிற்கு ரூ.1000/-மும் 29.11.2022ம் தேதிக்குள் செலுத்தவேண்டுமென்றும், தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 30.11.2022.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் நாள் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம். திரு. பி.சி. கோபிநாத், எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

// உண்மை நகல்//

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.
I.A. 03/2022
O.S. 22/2015
உத்தரவு (உண்மை நகல்)
நாள் : 18.11.2022